**கொவிட் - 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்திற்கான மூன்றாவது மேலதிக நிதியளிப்பு - (2024 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையான காலப்பகுதி)**

---

கொவிட் - 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்திற்கான மூன்றாவது மேலதிக நிதியளிப்பின் 2024 சனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையான காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 செப்தெம்பர் 24 ஆம் திகதிய பிஏடி 4691 ஆம் இலக்க உலக வங்கி அறிக்கையின் 40 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு அமுல்ப்படுத்தல முகவராக உள்ளது. கொவிட்-19 தடுப்பூசிகளுக்கான மலிவு மற்றும் சமமான அணுகலை விரைவுபடுத்துதல் மற்றும் தடுப்பூசி முறைமையை வலுப்படுத்துவதன் மூலம் இலங்கையில் பயனுள்ள தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த உதவுதல் மற்றும் தாய் செயற்திட்டத்தின் கீழ் தயார்நிலை மற்றும் பதிலளிப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துதல் என்பன இந்த செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,000.00 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 100.00 மில்லியனானதுடன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 செப்தெம்பர் 27 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறான போதிலும், செயற்திட்டத்தின் பணிகள் நிறைவடையும் திகதி 2024 ஏப்ரல் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் 2.1 பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2024 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு திறைமையீனம் / கணக்காய்வுப் பிரச்சினை | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2022 ஆம் ஆண்டினுள் மருத்துவமனைகளில் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட 3764 வெற்று சிலின்டர்களின் பெறுமதியானது வரிசை அமைச்சின் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 173.13 | ஒஸ்சிஜன் சிலின்டரை வழங்கிய உரிய மருத்துவமனை குறித்த சிலின்டர்களை கணக்கு வைத்துள்ளதா என்பதை பரீட்சிக்குமாறு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு (இருப்பு மெய்மையாய்வு) அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அனைத்து சொத்துக்களும் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கொவிட் - 19 இற்கான 14 மில்லியன் பைசர் தடுப்பூசிகள் 2021 திசெம்பர் மற்றும் 2022 சனவரி மாதங்களில் ரூபா 16,102 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், இந்த தடுப்பூசிகளில் காலாவதியான தடுப்பூசிகள் தொடர்பில் தகவல் சமர்ப்பிக்குமாறு கோரியிருந்த போதிலும், அந்த தகவல்கள் 2025 மார்ச் 14 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) மற்றும் பணிப்பாளர் (தொற்றுநோயியல்) ஆகியோரிடமிருந்து கோரப்பட்ட தகவல்களை சேகரித்து ஒரு மாதத்தினுள் சமர்ப்பிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | காலாவதியான தடுப்பூசிகளை இனங்கண்டு தகவல்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 198.65 மில்லியன் பெறுமதியான மருத்துவ வழங்கல்கள் (தன்னியக்க முறையில் செயலிழக்கும் சிரின்ஜ்கள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் K 95 முகக் கவசங்கள்) கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறான போதிலும் அவற்றில் பயன்படுத்திய மற்றும் காலாவதியான எண்ணிக்கை தொடர்பில் தகவல் கோரியிருந்த போதிலும், அந்த தகவல்கள் 2025 மார்ச் 14 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ வழங்கல்) ஆகியோரிடம் கோரியிருந்த தகவல்கள் கேகரிக்கப்பட்டு ஒரு மாதத்தினுள் சமர்ப்பிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கோரப்பட்ட தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |